திருமதி செல்வி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணியெல்லாம் போற்றும் தங்கத் தாரகை, வாழ்நாள் சாதனையாளர், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். காங்கேயம் பேருந்து நிலையத்தில் தாட்கோமூலம் கட்டப்பட்ட 10 கடைகள் வாடகைக்கு விடப்படாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அப்படியிருப்பின் அந்தக் கடைகளைச் சிறப்பு ஊராட்சியின் கட்டுப்பாட்டில் கொடுத்தாலாவது அவர்கள் அதை ஏலத்தில் வாடகைக்கு விடுவார்கள். காரணம், கடைகள் பூட்டியே இருப்பதால் பாழடைந்துவிடும். இதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இதுபோன்ற கடைகள் எல்லாம் ஆதிதிராவிட மக்கள் பயன்பெற வேண்டுமென்கிற சீரிய நோக்கோடு, சிறப்பாக எடுத்த நடவடிக்கையின் மூலமாக ஈரோடு மாவட்டத்திலே புஞ்சைபுளியம்பட்டியிலே 8 கடைகளும், கவுந்தப்பாடியில் 10 கடைகளும், காங்கேயத்தில் 10 கடைகளும், நம்பியூரில் 10 கடைகளும் கட்டிக் கொடுக்கப்பட்ட இடங்களில், இப்போது கவுந்தப்பாடியில் மட்டும் காலியாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன காங்கேயம் பகுதியில் கட்டப்பட்ட 10 வணிக வளாகக் கடைகளும் இப்போது பயன்பாட்டில் உள்ளன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 126, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

126—

அரசுப் பேருந்து

***49834—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2005 மார்ச் 9]

(அ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், வைரவநத்தம், விட்டங்குளம், சிறுவாலை வழியாக அலங்காநல்லூருக்கு அரசுப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், வைரவநத்தம், விட்டங்குளம், சிறுவாலை வழியாக அலங்காநல்லூருக்கு அரசுப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியின் கடைசிப் பகுதிகள் வைரவநத்தம், விட்டங்குளம், மணியகாரம்பட்டி, சிறுவாலை, சிறுபாளைபுதூர், அம்பலத்தாடி, வயலூர், பிள்ளையார்நத்தம், அரியூர், நெடுங்குளம், சம்பக்குளம் ஆகிய கிராமங்களாகும். பள்ளி மாணவ மாணவியர் பள்ளிக்குச் செல்லவும், மருத்துவம் மற்றும் விவசாய உரம், காய்கறிகள், வீட்டுப் பொருள்கள் வாங்க வேண்டுமானால் அருகிலுள்ள அலங்காநல்லூருக்குத்தான் செல்கின்றனர். எனவே, பொது மக்களின் நலன் கருதி, பள்ளி மாணவ மாணவியரின் நலனில் அக்கறை கொண்டுள்ள, தாய் உள்ளம் கொண்டுள்ள தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அலங்காநல்லூருக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து வைரவநத்தத்திற்கு ஆறு நடைகள் இயக்கப்படுகின்றன. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மேலச்சின்னம்பட்டிக்கு தனிச்சயம் வழியாக ஆறு நடைகள் இயக்கப்படுகின்றன. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அலங்காநல்லூர் வழியாக மேலச்சின்னம்பட்டி வரை 30 நடைகள் இயக்கப்படுகின்றன. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து குமாரம் வழியாக சிறுவாலை கிராமத்திற்கு 30 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்த வழித்தடத்தில் நேரடியாகப் பேருந்து வசதி இல்லையே தவிர, பகுதி பகுதியாக அந்தக் கிராமங்கள் பேருந்து வசதி பெற்று இருக்கின்றன. ஆனால், அவர் கேட்டிருக்கின்ற மற்றொரு கிராமமான விட்டங்குளம் கிராமம் மட்டும்

[2005 மார்ச் 9

அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக பேருந்து வசதி பெறாமல் இருக்கிறது. ஆனால், அந்த கிராமத்திற்குக்கூட தனியார் பேருந்துகள் மூலமாக ஏறத்தாழ 12 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆக, இந்தக் கிராமம் தவிர, மற்ற கிராமங்கள் அனைத்தும் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக பகுதி பகுதியாகப் பேருந்து வசதி பெற்று இருக்கின்றன. விட்டங்குளம் கிராமமும் தனியார் பேருந்து வசதி மூலமாக, மினி பேருந்து வசதி மூலமாக அந்த வசதியைப் பெற்று இருப்பதால், இந்தக் கோரிக்கையை அரசு ஏற்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.பி. பொன்னம்பலம்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி பக்கத்தில் உள்ள அலங்காநல்லூர் கிராமத்திற்குத்தான் அதிகமானவர்கள் செல்கின்றனர். எனவே, இதில் ஏதாவது, ஒரு பேருந்தை வயலூர் அல்லது வைரவநத்தம் வழியாக விடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பேரன்பு கொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய பிறந்த நாள் விழா கொண்டாடும்போது, ஆனையூர் பேரூராட்சியில் உள்ள மிளகரனை கிராமத்திற்குப் பொது மக்களின் நலன் கருதி, பொது மக்கள் என்னிடத்தில் கூறியதன் விளைவாக அமைச்சரிடத்தில் ஒரு பேருந்து விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதற்கு உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொது மேலாளர் அவர்களிடத்தில் கூறி ஒரு பஸ் விடவேண்டும் என்று சொன்னார்கள். அது உடனடியாக 1 ஆம் தேதி விடப்பட்டதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை, பெரியார் நிலையத்திலிருந்து வாடிப்பட்டி செல்லும் நகரப் பேருந்தை டபேதார் சந்தையில் ஆட்டுத் தோல் விற்பனை சந்தை நடப்பதால், அங்கே அந்தப் பேருந்து நின்று செல்லுமாறு ஆவன செய்யுமாறும், மதுரை, சிவகங்கை செல்லும் பேருந்து வரிச்சியூர் கிராமத்தில் நின்று செல்லவும், மதுரை நத்தம் வழியாக காஞ்சரம்பேட்டைக்கு—அங்கு நல்லமணி பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று நடந்துகொண்டு இருக்கிறது. அங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவியர் பயில்கிறார்கள். எனவே, காஞ்சரம்பேட்டைக்கும் ஒரு பஸ் விடுமாறும், அழகர்கோயில் வழியாக செல்கின்ற வழியில்...

2005 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னம்பலம், ஏதாவது ஒரு ஊருக்குக் கேளுங்கள்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: ஒரு மணித் துளி மட்டும் எனக்கு நீட்டித்துக் கொடுக்குமாறு பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு அதிகமான வாய்ப்பு கிடைக்காது. அதனால் ஒரு மணித் துளி நீட்டித்து கொடுக்கும்படி மிகப் பணிவோடும், பரிவோடும் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) அத்தோடு அழகர்கோயில் வழியில் உள்ள கடச்சனேந்தல்லுக்கு ஒரு பேருந்து விடவும், அழகர்கோயிலுக்கும் மேலூருக்கும் நகரப் பேருந்து விடுவதற்கும் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியான சமயநல்லூர் தொகுதி, மாநகராட்சியைச் சார்ந்த கிராமப்புறங்கள் ஆகும். அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்பே என்னுடைய தொகுதியைப் பற்றி நன்கு தெரிந்தவர். எனவே, என்னுடைய தொகுதியானது நகர்ப்புறமும், கிராமப்புறமும் சேர்ந்த தொகுதி. மதுரை நகரை ஒட்டியுள்ளதால், அங்குள்ள அனைவரும் மதுரைக்குச் செல்ல வேண்டி இருப்பதால், இந்த வழித் தடங்களைச் செயல்படுத்த வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கின்ற அந்த வழித் தடங்கள் அனைத்தும், இப்போது பேருந்து வசதி பெற்ற கிராமங்கள்தான். ஆனால், ஒருசில கிராமங்களில் கூடுதல் வழித்தடங்கள் வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டு இருக்கிறார். அதுகுறித்த மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் இப்போது வைத்த கோரிக்கைகளையும் அதனுடைய தகுதிக்கேற்ப ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி வளர்மதி ஜெபராஜ்,

முற்பகல் 10-55

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்பரங்குன்றம் வரை போகிறவழியில் மதுரை கல்லூரி, திருமலைநாயக்கர் கல்லூரி, தியாகராஜர் கல்லூரி போன்ற பல்வேறு முக்கியமான கல்லூரிகள் இருக்கின்றன. சிலைமானிலே உள்ள சில பெரியவர்கள் என்னிடத்திலே

[2005 மார்ச் 9

ஒரு கோரிக்கை வைக்கச் சொன்னார்கள். சிலைமானிலே இருந்து கல்லூரிக்குப் போகின்றபோது பெரியார் பேருந்து நிலையம் வந்து அதற்குப் பிறகு திருப்பரங்குன்றம் போக, இரண்டு பஸ் மாறிச் செல்லக் கூடிய சூழ்நிலை. எனவே, மாணவ, மாணவிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் சிலைமானிலிருந்து திருப்பரங்குன்றம் வரை நேரடி பஸ் விடப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 127, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

127—

பெருந்தொழில்

***50854அ—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் டிட்கோ மூலமாக பெருந்தொழில் துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 128, திரு. க. தவமணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.